பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 08 வியாழக்கிழமை (24.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 269

## சிவமகாராசாவுக்கு 'மாமனிதர்' கௌரவம் தலைவர் பிரபாகரன் வழங்கி மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.24

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறந்த கூட்டுறவாளருமான, 'நமது ஈழநாடு' நாளேட்டின் நிர்வாக இயக்குநருமான சின்னத்தம்பி சிவமகாராசாவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தமிழீழத்தின் அதி உயர் தேசிய விருதான 'மாமனிதர்' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுய வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, பொது நல வாழ்வை இலட்சியமாக வரித்து, அந்த இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த உயர்ந்த மனிதரை இன்று நாம் இழந்துவிட்டோம். தமிழின விடுதலைக்காக ஒளிர்ந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்து விட்டது. எதிரியின் கோரமான தாக்குதலுக்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார். இந்த இலட்சிய மனிதரை இழந்து எமது தேசம் இன்று ஆறாத் துயரில் மூழ்கிக் கிடக்கிறது.

திரு. சின்னத்தம்பி சிவமகாராசா அவர்

(06ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை!

திருகோணமலை ஓக.24

திருகோணமலை கடற்கரைச் சந்தியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். மாலை 4.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதநபர்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருமலை, பாரதிபுரத்தைச் சேர்ந்த சண்முகராசா சுதாகர் (வயது 35) என்ற இளைஞரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. (ம)

# அரசுப் படைகளின் வலிந்த தாக்குதல்களின் பின்னணியில் பரந்த இராணுவ நோக்கங்கள்

## சாடுகின்றார் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தாம் செய்வது தற்காப்பு நடவடிக்கை என்கிறார்

கிளிநொச்சி, ஓகஸ்ட் 24

**திருகோணமலையில் அரசு வலிந்து ஒரு பாரிய படை நடவடிக்கையை ஆரம்பித்ததை அடுத்தே அதற்கு எதிராகத் தற்காப்புத் தாக்குதல்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. தன்னுடைய இந்த வலிந்த இராணுவத் தாக்குதலின் பின்னணியில் அரசுத் தலைமை பரந்த நோக்கங்களைக் கொண்டுள்ளது என்பது இந்த நடவடிக்கைமூலம் உறுதியாகி இருக்கின்றது.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.**

யுத்த நிறுத்தத்தில் தமக்குள்ள பற்றுறுதியை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தவேண்டும் என்றும், புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடமிருந்து வரக்கூடிய மோதல் தவிர்ப்பு யோசனை எதனையும் அக்கறையுடன் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறார் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருக்கும் கருத்துகளுக்குப் பதிலளிக்கையிலேயே

(06ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகருக்குள் நேற்று பெண் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ். வைத்தீஸ்வராச் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை பெண் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

காலை 9.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேயிடத்தைச் சேர்ந்தவரான பாலசிங்கம் புவனேஸ்வரி (வயது 44) என்ற பெண்மணியே சம்பவத்தில் பலியானவராவார். இவர் அப்பகுதியில் கச்சான் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்தார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அண்மையில் இராணுவக் காவலரண் ஒன்று இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இவரது கொலைக்கு எல்லாளன் படை உரிமை கோரியுள்ளது. (ம)

## பயணிகளை றுகுணு கப்பல் ஏற்றிச் செல்வது சந்தேகம்?

யாழ்ப்பாணம்,ஓக.24

பருத்தித்துறைக்கு இன்று வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் 'றுகுணு' கப்பல் பொருள்களை இறக்கி முடித்தபின்னர் இங்கிருந்து பயணிகளை ஏற்றிச்செல்வது கேள்விக்குரியதாகியுள்ளது. யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நேற்றிரவு இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 11ஆம் திகதி வடக்கில் ஆரம்பமான மோதல்கள் காரணமாக ஏ-9 வீதி மூடப்பட்டதால், குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான போக்குவரத்துகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன. வெளியிடங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த ஆயிரக்கணக்கானவர்கள் திரும்பிச் செல்லமுடியாதநிலையில் சிக்கிச்

(06ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி இந்தியத் தலையீட்டுக்கு புலிகள் முயற்சி

### வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஓக.24

தமிழ் நாட்டுக்கு தமிழ் மக்களை அகதிகளாக அனுப்பிவைத்து இந்தியாவின் தலையீட்டை புலிகள் எதிர்பார்க்கின்றனர். தமிழ் அகதிகளை கவனிப்பதையிட்டு இந்திய அரசுக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில்

(06ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை வெளியேற்ற முடியாது ஜே.வி.பிக்கு சுதந்திரக் கட்சி பதில்

கொழும்பு, ஓக.24

சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேயை வெளியேற்ற முடியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. ஜே.வி.பிக்கு அளித்த பதிலிலேயே அது இப்படித் தெரிவித்துள்ளது. அவ்வாறு நோர்வேயை வெளியேற்றுவது மற்றுமொரு பிரச்சினைக்கு வழிவகுத்து விடக்கூடும் என்றும் கட்சி தெரிவித்துள்ளது.

அரசுடன் இணைவதற்கு ஜே.வி.பி. பல்வேறு நிபந்தனைகளை விதித்திருந்தது. அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் அக்கட்சிக்கு அனுப்பியுள்ள பதிலிலேயே சுதந்திரக் கட்சி இவற்றைத் தெரிவித்துள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டு அரசோடு இணைகின்றது இ.தொ.கா.

கொழும்பு,ஓக.24

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி ஒன்று உட்பட இரண்டு பிரதியமைச்சுப் பதவிகளையும் பெற்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளது.

பெரும்பாலும் இன்று அல்லது நாளை இ.தொ.கா. அரசுடன் இணையுமென்று அந்தக் கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இளைஞர் விவகாரம், கைத்தொழில் பயிற்சி

(06ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வர்த்தகர் கடத்தப்பட்டார்

கொழும்பு, ஓக. 24

கொழும்பில் மலையகத் தமிழ் வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டிருக்கிறார்.

மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரான இந்த வர்த்தகர் நேற்று மாலை அவரது வர்த்தக நிறுவனத்தில் இருந்த சமயம் வெள்ளை வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கி முனையில் அவரைக் கடத்திச்சென்றனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

## அமெரிக்கா செல்கிறார் ஜனாதிபதி மஹிந்த அதிபர் புஷ்ஷிடம் நேரில் உதவிகோருவார்

கொழும்பு, ஓக. 24

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அடுத்த மாதம் நடுப்பகுதியில் அமெரிக்கா செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நியூயோர்க்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷை சந்தித்துப் பேசவுள்ளார்.

பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உலக நாடுகளின் தலைவர்களின் சம்பிரதாயபூர்வ சந்திப்பிற்குப் புறம்பாக மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குத் தேவையான

(06ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் வவுணதீவில் சிப்பாய் பலி!

மட்டக்களப்பு, ஓக.24

மட்டக்களப்பு வவுணதீவில் உள்ள இராணுவ நிலைகளை நோக்கி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். சிறியரக ஆயுதங்கள் மோட்டார்கள் சகிதம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 4.10 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். விஜேரட்ண என்ற சிப்பாயே கொல்லப்பட்டவராவார். (ம)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாடம் காய்ச்சிகள் மிக விரைவில் பட்டினிச்சாவு நிலைக்குத் தள்ளப்படுவர்?

யாழ்ப்பாணம்,ஓக.24

தமது அன்றாட ஜீவனோபாயத்தை நடத்துவதற்கு அதேதினத்தின் உழைப்பினால் பெறப்படும் வருமானத்தை மட்டுமே நம்பியிருக்கும் அன்றாடங்காய்ச்சிகள், குறிப்பாக குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் விரைவில் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் கடந்த இரு வாரங்களாகப் படையினரின் தொடர்ச்சியான ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுவாகவே மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதிலும் அன்றாடங்காய்ச்சிகளின் நிலை பெரும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது.

குறிப்பாகத் தோட்டக் கூலிகள், கல்லுடைப்பவர்கள், மேசன் மற்றும் கட்டடத் தொழிலாளிகள், சாதாரண நாள் கூலிக்குச் செல்பவர்கள், மூட்டை தூக்குபவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக இவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் ஏதுமில்லை. வருமானம் பெறுவதற்கான வழிகளும் இல்லை. அதேசமயத்தில், கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக நிவாரண உதவிகள் எவையும்கூட இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் இடம்பெயர்ந்து முகாம்களில் இருப்பவர்களுக்கு மட்டுமே நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அதனால் அரச நிறுவனங்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ இந்த அன்றாடங் காய்ச்சிகளுக்கு நிவாரண உதவிகள் எவற்றையும் இதுவரை வழங்கவில்லை.

ப.நோ.கூ.சங்கங்களில் தற்போது பங்கீட்டு அட்டைக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அவற்றை வாங்குவதற்கு இத்தகைய குடும்பங்களிடம் பணம் இல்லை.

அதனால் அவர்களது குடும்பங்கள் பட்டினியில் வாடுகின்றன. இத்தகைய அநேகமான குடும்பங்களுக்குத் தற்போது ஒரு நேரச் சாப்பாடு கிடைப்பதே பெரும்பாடாக இருக்கிறது என்று எமது பிரதேசச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக குழந்தைகள் சிறுவர்கள் ஆகியோர் இந்த நிலையால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இன்னும் சிறிது காலத்திற்கு இந்த நிலை தொடருமாக இருந்தால் இந்தக் குழந்தைகளும் சிறுவர்களும் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் அவல நிலை ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பங்கீட்டு அட்டைக்கு தற்போது மா, சீனி, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், இத்தகைய அன்றாடங்காய்ச்சிகளின் குடும்பங்கள் இவற்றில் ஒரு பொருளைக் கொள்வனவு செய்வதற்கே பணம் அற்ற நிலையில், மற்றைய பொருள்களை பணம் வைத்திருக்கும் எவருக்காவது வாங்கிக் கொடுத்துவிடும் அவல நிலையை கூட்டுறவுச் சங்கங்களின் முன்பாக அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய அவல நிலையைப் போக்குவதற்கான உடனடி நடவடிக்கைகளை அரச அதிகாரிகளோ அரச சார்பற்ற நிறுவனங்களோ மேற்கொள்ள வேண்டியது அவசியமானது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, தற்போதைய ஊரடங்கு உத்தரவு காரணமாக விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுவதில் இருந்து விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவது வரை அவர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (ம)

## பொரளையில் 9 பேர் கைது

கொழும்பு,ஓக.24

நேற்றுமுன்தினம் பொரளையில் கிளைமோர் குண்டு மீட்கப்பட்டதை அடுத்து அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் 9 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட 9 பேரில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர் எனவும் 7 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் பொரளைப் பொலிஸார் 'உதயனு'க்குத் தெரிவித்தனர். தம்மை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களை இவர்கள் 7 பேரும் வைத்திருக்காததாலேயே தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் பொலிஸார் கூறினர்.

இவர்களை நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க)

## புலிகளுக்கு தொடர்பில்லை

கிளிநொச்சி,ஓக.24

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வாங்க முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்கப் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்ட எட்டுத் தமிழர்களுக்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன் தெரிவித்துள் ளார்.

விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் வாங்க முற்பட்டனர், விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்காவின் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு அமெரிக்க அரசுக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டனர், விடுதலைப் புலிகளுக்கு அமெரிக்காவில் நிதி சேகரித்தனர் என்ற குற்றச்சாட்டுகளின் பேரில் இரண்டு கனடியத் தமிழர்களும் ஆறு அமெரிக்கத் தமிழர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது கைது சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளரிடம் கேட்டபோது, கைதுசெய்யப்பட்டவர்களுக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்றும் நாம் செயற்படும்முறை இதுவல்ல என்றும் இப்படி ஒரு காரியத்தை நாம் ஒருபோதுமே செய்தது கிடையாது என்றும் கூறியுள்ளார். (ஐ)

## சுதந்திரக் கட்சியின் சம்மேளன கூட்டத்துக்கு சந்திரிகாவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு

கொழும்பு, ஓக.24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கட்சியின் முன்னாள் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்றபோது சுதந்திரக் கட்சியின் செயலாளர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொள்ளக் கட்சியின் முன்னாள் தலைவிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையெனக் கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்க ஆட்சேபனை தெரிவித்திருந்தார். இது கட்சிக்குள் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்தான உண்மை நிலை என்ன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஆளுங் கட்சியின் நாடாளுமன்றக் கூட்டத்தின்போது வினவியிருக்கிறார்.

அப்போது பதிலளித்த செயலாளர் மைத்திரிபால சிறிசேன, இந்தக் கூட்டத்திற்கான அழைப்புக் கடிதங்கள் முன்னாள் தலைவிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும், முன்னாள் தலைவியின் அலுவலகம் இந்தக் கடிதங்களை ஏற்றுக்கொண்டதற்கான சான்றுகள் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த சம்மேளனம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## குடாநாட்டுக்குப் பொருள்கள்; இந்தியாவின் உதவி கோரப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தகவல்

கொழும்பு,ஓக.24

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டால் இந்தியாவின் உதவியைத் த்ாம் நாட உள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதல் காரணமாக அங்கு அத்தியாவசியப் பொருள்களின் தேவை அதிகரித்திருக்கிறது. இன்று (செவ்வாய்) கப்பல் ஒன்று யாழ்ப்பாணம் நோக்கி புறப்படுகின்றது. தொடர்ந்தும் கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை யாழ். குடாநாட்டிற்கு எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுமாயின் இந்தியாவின் உதவி கேட்கப்படும். அதனைச் செய்வதற்கு அரசாங்கம் பின்நிற்குமாயின் நான் தனிப்பட்ட முறையில் இந்த கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைப்பேன்.

அத்தியாவசியப் பொருள்களை குடாநாட்டிற்கு விநியோகம் செய்யுமாறு அரசாங்கம் உதவி கோரியதாக எனக்குத் தகவல் எதுவும் தெரியாது.

## வெளிநாடு சென்ற அனுராவை உடன் நாடு திரும்பப் பணிப்பு

### அனுமதியில்லாமல் புறப்பட்டாராம்

கொழும்பு,ஓக.24

உரிய அனுமதி பெறாமல் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருக்கிறார் என்று கூறப்படும் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவை உடனடியாக நாடு திரும்புமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாத்துறை தொடர்பான ''பிம்ஸ்டெக்' மாநாடு எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நேபாளத்தில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை சார்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கலந்துகொள்ள ஏற்பாடாகியிருந்தது.

இந்நிலையில் கடந்த இரு நாட்களுக்கு முன்னரே இலங்கையிலிருந்து புறப்பட்ட அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க பாங்கொக் சென்றார். அங்கிருந்து சில நாட்கள் ஓய்வு பெற்ற பின்னர் அவர் நேபாளம் செல்லவிருந்தார்.

இந்நிலையில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க வெளிநாடு செல்வதற்கு முன்னர் உரிய அனுமதியை ஜனாதிபதி செயலகத்திடமிருந்து பெற்றிருக்கவில்லை என்றும், இதனால் அவர் உடனடியாக நாடு திரும்ப வேண்டுமென்றும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்று உத்தரவு பிறந்திருக்கிறது என்றும் கூறப்பட்டது.

வெளிநாடு செல்வதற்கு முன்னர் ஏன் உரிய அனுமதியைப் பெறவில்லையென அமைச்சரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி, ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அமைச்சர் அனுரா பண்டார நாயக்க நேற்று மாலை நாடு திரும்பவிருந்தார் என்றும் கூறப்பட்டது.

முன்னதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த சம்மேளனக் கூட்டத்தில் பண்டாரநாயக்க குடும்பத்தினர் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள் எனக் கூறி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க பகிரங்கக் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஓக.24

வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியர்களையும் ஊழியர்களையும் ஓகஸ்ட் மாதச் சம்பளம் பெறும்பொருட்டு இன்று ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் சமுகமளிக்கும்படி கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ம-1)

## மூடப்பட்ட ஏ-9 வீதியைத் திறப்பது குறித்து அரசு - புலிகள் இடையே தகவல் பரிமாற்றம்

### சர்வதேச தொண்டர் நிறுவனம் தீவிர முயற்சி

கொழும்பு, ஓக.24

மூடப்பட்டிருக்கும் ஏ-9 வீதியை மீண்டும் பயணிகள் போக்குவரத்துக்குத் திறந்து விடுவது தொடர்பாக அரசுத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தகவல்கள் பரிமாற்றப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்று இரண்டு தரப்பாருடனும் பேச்சு நடத்தி வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

அரசுத் தரப்பில் அதன் சமாதான செயலகத்துடனும், விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறை மற்றும் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான தரப்புகளுடனும் குறிப்பிட்ட தொண்டு நிறுவனம் பேச்சு நடத்தி வருகின்றது. மிகவிரைவாக ஏ-9 வீதியைத் திறப்பதற்கு முயற்சி நடைபெற்று வருகிறது.

தென்மராட்சியில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் [illegible] சோதனை நிலையத்தை எங்கு அமைப்பது என்பது உட்பட முக்கிய விடயங்களில் இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக இணையத் தளம் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை-

மன்னார் உயிலங்குளம் ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்லும் வீதியில் நேற்றுப் பகல் முழுவதும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது என்று வவுனியா தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## மலையக மக்கள் முன்னணியும் அரசுடன் இணைய ஆயத்தம்?

கொழும்பு, ஓக.24

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணையப்போவதாக செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், மலையக மக்கள் முன்னணியும் அரசுடன் இணைவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பில் ஏற்கனவே மலையக மக்கள் முன்னணி அரச உயர்மட்டத்துடன் பேச்சுகளை நடத்தியிருப்பதாகவும், இந்தப் பேச்சுகள் நல்ல முன்னேற்றத்தைத் தந்திருப்பதாகவும் மலையக மக்கள் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கத்துடன் இணையும் பட்சத்தில் எந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்பது என்பது குறித்து மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் கடந்த சில தினங்களாக கட்சி முக்கியஸ்தர்களுடன் ஆலோசித்து வருகிறாரெனத் தெரிகிறது.

மலையக மக்கள் முன்னணி அரசுடன் இணையும் பட்சத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படக் கூடுமென்று அரச உயர்மட்ட வட்டாரங்கள் கூறின. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு வீசி - குழல் பீரங்கியால் அடித்து தமிழர்களை ஒடுக்கும் கனவு பலிக்காது

## சபையில் மாவை சேனாதிராஜா சாட்டை



கொழும்பு,ஓக.24

விமானக் குண்டுகளை வீசியோ அல்லது பல்குழல் பீரங்கியால் தாக்கியோ அல்லது பட்டினி போட்டோ தமிழர்களை அடக்கி ஒடுக்கி விடலாமென அரசு நினைத்தால் அது பகற்கனவாகவே முடியும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா நேற்று சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் கூடியது.

விவாதத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் இப்போது மனித அவலங்கள் மலிந்து விட்டன. ஒரு லட்சத்து 58 ஆயிரம் தமிழ், முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என ஐ.நா. மனித உரிமை நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேவேளை, 8 ஆயிரத்துக்கு அதிகமானோர் உயிரைப் பயணம் வைத்து இந்தியாவுக்கு தப்பியோடியுள்ளர்.

கிபீர் குண்டுவீச்சில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை இன்னும் தெரியவில்லை. முல்லைத்தீவு பரந்தன் வீதியில் அமைந்துள்ள செஞ்சோலையில் முதலுதவிப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த பள்ளி மாணவிகளில் 67 பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் இன்னும் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல அதை நியாயப்படுத்தும் வகையில் பேசியுள்ளார். அரசு புலிகளின் பயிற்சி முகாம் மீதே குண்டு வீசியது எனத் தெரிவிக்கின்றார்.

யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெவ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கு சென்று நேரடியாகப் பார்த்துள்ளனர். அங்கு புலிகளின் பயிற்சி முகாம் இருக்கவில்லை. பள்ளி மாணவிகளே இரு நாள் முதலுதவிப் பயிற்சி முகாமில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவித்துள்ளனர்.

அல்லைப்பிட்டியிலும் அடைக்கலம் புகுந்த மக்கள் மீதும் குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது. அங்கு 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. குண்டு வீச்சால் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை மீட்டெடுப்பதற்குக் கூட கடற்படையினர் அனுமதிக்கவில்லை.

அல்லைப்பிட்டிக்குச் சென்ற கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவரை மூன்று நாட்களாகக் காணவில்லை. அல்லைப்பிட்டியில் இப்போது மக்கள் இல்லை. கடற்படையினரே இருக்கின்றனர். இந்த நிலையில் பாதிரியார் காணாமற் போயுள்ளார்.

யாழ். குடாநாட்டில் பாதுகாப்பாக வெளியேறும் உரிமை மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. பிரதேச ரீதியாக வெவ்வேறு நேரங்களில் ஊரடங்கு நீக்கப்படுவதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லமுடியவில்லை. இந்த நிலையில் குண்டு வீச்சுகளும் இடம்பெறுகின்றன.

தெல்லிப்பழையில் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் சிவமகாராசா ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தபோது உயர்பாதுகாப்பு வலயத்தில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

அரச பத்திரிகையான டெய்லி நியூஸ் சிவமகாராசா புலிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என பொறுப்பற்ற முறையில் செய்தி வெளியிட்டுள்ளது.

மூதூரை விட்டு புலிகள் விலகிச் சென்ற பின்னர் சர்வதேச தொண்டு நிறுவனமான 'அக்ஷன்பாம்' ஊழியர்கள் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ் மக்களுக்கு எவரும் உதவி புரியக்கூடாது என்ற நோக்கத்திலேய இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன.

யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. ஒரு கப்பலில் உணவுப் பொருள்களை ஏற்றுவதற்கு பல நாட்களாகின்றன. அந்தக் கப்பல் புறப்பட்டதாகத் தெரியவில்லை.

நாங்கள் எங்கள் உரிமைக்காக ஜனநாயக முறைப்படி பலமுறை முயற்சித்தோம். அதுவே இன்று ஆயுதப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டத்தை முற்றும் முழுதாக நீக்க வேண்டும். மனிதாபிமான ரீதியில் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லப் புலிகள் தயாராகவுள்ளனர். எனவே, ஏ - 9 வீதியைத் திறக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- என்றார். (க)

# ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு புலிகள் பேச்சுக்கு முன்வரவேண்டும்

## விமல் வீரவன்ஸ எம்.பி. உபதேசம்



கொழும்பு,ஓக.24

"புலிகள் யுத்தத்தை நிறுத்திவிட்டு ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சுக்கு முன்வரவேண்டும். இல்லாவிட்டால் சமாதானம் ஏற்படவழியேஇல்லை."

- இவ்வாறு ஜேவிபி. நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

முல்லைத்தீவு செஞ்சோலையில் ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறுவர்களே குண்டு வீச்சில் கொல்லப்பட்டனர். புலிகள் சிறுவர்களைக் கடத்தி ஆயுதப் பயிற்சியளிப்பது ஒன்றும் புதிதல்ல. இவ்வாறு யுத்தப் பயிற்சி பெறும்போதே சிறுமிகள் கொல்லப்பட்டனர். புலிகளின் இணையத் தளங்களில் சிறுமியர் பயிற்சி பெறும் படங்கள் வெளியாகியுள்ளன.

புலிகள் மூதூரில் குண்டுகளை வீசியபோது பொதுமக்களை, முஸ்லிம்களைக் கருத்திற்கொண்டனரா? ஆயிரக்கணக்கில் முஸ்லிம்கள் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி வெளியேறவில்லையா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கொழும்பில் குளிரூட்டிய அறைகளிலிருந்துகொண்டு செயற்படுகின்றனர் என்று பொட்டு அம்மான் விமர்சித்துள்ளார். இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்த சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தைக் கோரியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குண்டுகளை வீசி தமிழ் மக்களை அடக்கியொடுக்க முடியாதெனத் தெரிவிக்கும் அதே வேளை, வன்னிக்கு உணவுப் பொருட்களை அனுப்பும்படியும் கோரிக்கை விடுக்கின்றனர். இது வேடிக்கையானது. கிளிநொச்சியிலிருந்து வைத்தியசாலைக்கு மருந்து வகைகளை அனுப்பும்படி கோருகின்றனர். இது மோதலில் காயமுற்ற புலித் தீவிரவாதிகளுக்குச் சிகிச்சையளிக்கவே.

கிளிநொச்சியிலுள்ள 'யுனிசெவ்' நிறுவனத்தில் ஓய்வுபெறும் வயதைத் தாண்டிய வெள்ளையர் ஒருவர் இருக்கின்றார். பென்னிபுரூக் என்ற இவர் முல்லைத்தீவு செஞ்சோலையில் பயிற்சி பெற்ற புலிச்சிறுமிகள் மீதான குண்டுவீச்சுத் தொடர்பாக பிழையான தகவல்களை 'யுனிசெவ்' தலைமையகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். இந் நபரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றவேண்டும். இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு 'யுனிசெவ்' தலைமையத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (க)

# இன்றைய யுத்த[illegible] பிரதான காரணம் ஆனையிறவை கைப்பற்றும் நோக்கமே

## சபையில் கிஷோர் எம்.பி. கூற்று

''ஆனையிறவைக் கைப்பற்ற இராணுவத்தினர் எடுத்த இரா ணுவ நடவடிக் கையே இன்று யுத்தமாக மாறி யது.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிவநாதன் கிஷோர் நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

"இந்த யுத்தத்தில் வென்று விடலாமெனப் பகல் கனவு காண்பதை விட்டு பேச்சுக்களின் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும். கடந்த 11 ஆம் திகதிக்குப் பின்னர் வன்னிக்கு உணவுப் பொருட்கள் எதுவும் அனுப்பப்படவில்லை. இது குறித்து யாராவது இச்சபையில் குரல் எழுப்பினார்களா? குண்டுத் தாக்குதல் மூலம் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி விடலாமென எண்ணிவிடாதீர்கள்.

திருகோணமலையில் யுத்தம் நடக்கின்றதா? ஏன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கான வீதிகளை மூடினீர்கள்? ஓமந்தைப் பாதையை ஏன் மூடினீர்கள்?

விடுதலைப் புலிகள் பேச்சுக்குத் தயாராகவிருக்கின்றனர். இருந்தும் ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் பேச்சுகளுக்குத் தொடர்ந்தும் முட்டுக்கட்டை போட்ட வண்ணம் உள்ளனர்.

ஜே.வி.பியினர் இந்த நாட்டில் மிக மோசமாகக் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது அவர்கள் மீது விமானக் குண்டு வீச்சை நடத்தினீர்களா? பொருளாதாரத் தடை விதித்தீர்களா?

முல்லைத்தீவு செஞ்சோலையில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் 61 மாணவிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அக் குண்டு வீச்சில் படுகாயமுற்ற மாணவிகள் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா கொண்டு வருவதற்குக் கூட நீங்கள் அனுமதிக்கவில்லை. உங்களது மனிதாபிமானம் இது தானா." - என்றார். (க)



நாடாளுமன்றத்திலிருந்து...

# நீருக்காகத் தொடங்கிய போராட்டம் நீண்டு செல்வது வேதனை தருகின்றது

## சபையில் ஹசன்அலி எம்.பி. கருத்து

இந்நாடு தற்போது போரா, சமாதானமா என்ற கேள்விகளுக்கு விடையைத் தேடி அலைகின்றது. சமாதான விரும்பிகள் போரைத் தடுப்பதற்காக முயற்சிக்கும் அதேநேரம் போர் விரும்பிகள் சமாதானத்தைத் தடுப்பதில் முழு மூச்சுடன் செயற்படுகின்றார்கள். இந்தப் பலப் பரீட்சையில் யார் வெற்றிபெறப்போகின்றனர் என்பதைப் பொறுத்துத்தான் இந்நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

- இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்தார். சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மாவிலாறு நீருக்காகத் தொடங்கிய போராட்டம் மூதூர் கிராமத்தை ஒரு போர்க் களமாக மாற்றியது. இதில் தொடங்கி படிப்படியாக இன்று நாடு முழுவதும் எல்லைகளைக் கடந்து வியாபித்து வளர்ந்து வருகின்றது. இந்த யுத்த நிலைமைக்கான ஆரம்ப நகர்வுகளை மூதூர்ப் பிரதேசத்தில் ஏற்படுத்தியவர்கள் ஒரு பாரிய குற்றத்தைப் புரிந்துள்ளனர்.

மூதூர் போர்க்களத்தில் அரங்கேறிய யுத்த நாடகத்தின் முடிவில் போரிட்ட இரு தரப்பினரும் வெற்றியடைந்துவிட்டனர் என இன்று எக்காளம் இடுகின்றனர். இவர்களின் வெற்றியின் பெறுபேறுகள் எவை? முஸ்லிம்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றுவதில் வெற்றியடைந்து விட்டார்களா அல்லது அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதில் நிம்மதி கண்டுவிட்டார்களா? யாரை யார் வெற்றிகொண்டுள்ளார்கள்? யாரை யார் தோற்கடித்துள்ளார்கள்? இரு தரப்பினரும் பெற்ற வெற்றியில் ஈற்றில் தோல்வியடைந்தது முஸ்லிம் சமூகம்தான்.

இவ்வாறான துரதிஷ்டவமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ள முஸ்லிம் சமூகம் இன்று விரக்தியின் விளிம்புக்குச் சென்றுவிட்டது. முஸ்லிம் சமூகத்தைச் சின்னாபின்னப்படுத்தி, அதன் அரசியல் எழுச்சியைக் கூறுபோட்டு, அதன் அழிவில்தான் இந்த நாட்டில் சமாதானம் நிலவவேண்டும் என்று யாராவது நினைத்தார்களானால் அவர்களைப் பார்த்து நாம் வேதனைப்படுகின்றோம்.

இரண்டு யானைகள் மோதும்போது அவற்றின் காலடியில் கசங்கி மாண்டுபோகும் புல்பூண்டுகள் போல முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் இருக்கப்போவதில்லை. ஆகக் குறைந்த பட்சம் யானைகள் நெருங்கமுடியாத முட்புதர்களாவது எம்மை மாற்றிக்கொள்ள எமக்குத் துணிவு இருக்கின்றது. தற்பாது காப்பு என்பது எந்த உயிரினத்துக்கும் உள்ள உரிமையாகும். அந்த உரிமையை இறையாண்மையுள்ள அரசிடமிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம். இதனை ஒரு சலுகையாக நாம் கேட்கவில்லை. எந்தப் பிரஜைக்கும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை மறுக்கப்படக்கூடாது. அந்த அடிப்படையில் முஸ்லிம் கிராமங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதற்கான விசேட திட்டங்களை முஸ்லிம்களின் அனுசரணையுடன் அரசு மேற்கொள்ளவேண்டும்.

1956ஆம் ஆண்டு இந்த நாட்டில் இனவாத விதைகள் புதைக்கப்பட்டபோது இருந்த ஆபத்தான சூழல் மீண்டும் தலைதூக்கிவிட்டதோ என்ற அச்சநிலை இப்போது நிலவுவதை நாம் அவதானிக்கமுடிகின்றது. இந்த உயரிய சபையில் உரையாற்றிய பலரின் கருத்துக்கள் அதனை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளன.

சர்தேச சமூகத்தைப் புறக்கணித்துவிட்டு இராணுவ ரீதியாக இன்றை பிரச்சினைக்குத் தீர்வு தேட வேண்டும் என்ற வாதம் வலுப்பெற்று வருகிறது.

தெற்கிலுள்ள தீவிரவாத சக்திகளுக்கு வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களின் பால் கருணை இருக்குமானால் தயவுசெய்து அவர்கள் இந்த முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில், இன்றைய காலகட்டத்தில் வடக்கு - கிழக்கில் முழுமையான யுத்தமொன்று வெடிக்குமானால் அதனால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படப்போவது முஸ்லிம் சமூகமாகமேயாகும்.

இவ்வாறானதொரு நிலை வடக்கு - கிழக்கில் இனச் சுத்திகரிப்பைச் செய்துவரும் விடுதலைப் புலிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமைந்துவிடும். எனவே, தயவுசெய்து வீணான விஷப்பரீட்சையைக் கைவிடுங்கள். கடந்த 16 வருடங்களுக்கு முன்பு ஒரு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி தான் காத்தான்குடியிலும், பின்பு ஏறாவூரிலும் முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அன்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணநாள் ஒத்திவைப்பு

27.08.2006 [ஆவணி 11ஆம் நாள்] ஞாயிற்றுக்கிழமை
ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில்
செல்வன் தனுஷன் அவர்களிற்கும்
செல்வி தர்சினி அவர்களிற்கும்.
நடைபெறவிருந்த திருமணம் தற்போது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
நடைபெறும் காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

பெற்றோர்:

திரு.திருமதி.இராஜேந்திரன்
58/3, செட்டித்தெரு,
நல்லூர்.

திரு.திருமதி.குணரட்ணம்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் *சின்னத்துரை ஜெயக்குமார்* அவர்களின் அன்புத் தந்தை கந்தையா சின்னத்துரை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

*யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.*

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலிகள்

*எங்கள் இதயத் தெய்வத்திற்கு கண்ணீர் மலரால் காணிக்கை*

தோற்றம்
12 ★ 06 ★ 1903



மறைவு
29 ★ 08 ★ 2000

திதி: அமாவாசை பின்உரை
24.08.2006 வியாழக்கிழமை

### பொன்னப்பா இராசம்மா

குறைகள் எதுவுமின்றி குடும்பத்தில்
நிறைவுடனே சோகமே தெரியாது
எங்களை வாழ வைத்தார்கள் அம்மா
உங்களுடன் அப்பாவும் சேர்ந்து
எங்கள் வாழ்வை என்றும் மறக்க விடாது
நினைவில் நிற்க வைத்த தெய்வங்களே
இனி எந்த உலகில் காண்போம்
யாரிடமும் சொல்ல முடியாது அப்பா அம்மா
உங்களை அனுதினமும் மலர்கள் போட்டு
நினைவு கூருகின்றோம் உங்கள் ஆத்மா
சாந்திக்காக அனுதினமும் பிரார்த்தனைகள்
செய்வது உண்டு ஓம் சாந்தி! சாந்தி!

*பொ.சுப்பிரமணியம்
4, செட்டித்தெரு,
நல்லூர்.*

*இவரின் பிரிவை நினைவுகூறும்*
மகன், மகள், மருமகன், மருமகள்,
பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டிகள்.

## உரிமை கோரியது எல்லாளன் படை

நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பாலசிங்கம் புவனேஸ்வரி மற்றும் நேற்று முன்தினம் கரவெட்டி, கிழவித்தோட்டம் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட பெருமாள் சந்திரகுமார் ஆகியோரின் கொலைகளுக்கு எல்லாளன் படை உரிமை கோரியுள்ளது.

படையினருடன் பாலியல் தொடர்புகளை வைத்திருந்ததுடன் அவர்களுக்குத் தகவல்களை வழங்கி வந்த புவனேஸ்வரி, சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்டுள்ளார் என்று எல்லாளன் படையின் துண்டுப்பிரசுரம் ஒன்று தெரிவித்தது.

சந்திரகுமார், படையினரின் பாலியல் தேவைகளுக்குப் பெண்களை ஏற்பாடு செய்து கொடுத்ததுடன் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தகவல்களைக் கொடுத்தார் என்றும் அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கண்ணீர் அஞ்சலி

தொல்புரம், கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் *திருமதி. சா.குகனேசன் அவர்களின்* அன்பு மாமி திருமதி.மீனாக்ஷி தாமோதரம்பிள்ளை அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கமநல சேவைக்குழு நிலைய உத்தியோகத்தர்கள்.*
*தொல்புரம். விவசாய சம்மேளனங்கள்.*

## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை விமலநாதன் (நாதன்)

சுன்னாகம், ஸ்ரேசனடியைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை விமலநாதன் நேற்று (23.08.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அப்பாத்துரை-இராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் இளையதம்பி-தங்கம்மா தம்பதியரின் மருமகனும் ஜோதீஸ்வரியின் (சாந்தி) அன்புக் கணவரும் ரஜிதா(கனடா), ரஜிதரன், ரம்யா, ரஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சபேசனின் மாமனும் கயினாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2006) வியாழக்கிழமை ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ஜோதீஸ்வரி (மனைவி).**

## நீருக்காக....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து தமிழ் குழுக்களின் இனப்படுகொலைக்கான நிகழ்ச்சி நிரல் இன்னும் தொடர்கதையாகவே இருந்து வருகின்றது. தனது சமூகத்தின் விடுதலை வேண்டி போரிடுவதாகக் கூறிவரும் விடுதலைப் புலிகள் இன்னுமொரு சிறுபான்மை இனத்தைக் கொன்று குவிப்பதனாலோ அல்லது விரட்டியடிப்பதினாலோ எவ்வாறு தமது இனவிடுதலையை அர்த்தமுள்ளதாக ஆக்க முடியும்?

விடுதலைப் புலிகள் தமிழ்பேசும் சகலரும் சுதந்திரமாக வாழ்வதற்கான ஒரு அரசியல் தீர்வை தேடுகின்றார்களா? அல்லது தமிழ் பேசும் மக்களைத் தாங்கள் மட்டும் தொடர்ந்தும் ஆள்வதற்கான ஒரு நிலப்பரப்பைப் பெறுவதற்கு போராடுகின்றார்களா? என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது - என்றார்.

## மரண அறிவித்தல்கள்

### கோவிந்தராசா சிவவடிவேல்

*(நாதஸ்வர வித்துவான் - நாச்சிமார்கோயிலடி).*

முருகமூர்த்தி லேன், நாச்சிமார் கோயிலடியை வதிவிடமாகக் கொண்ட கோவிந்தராசா சிவவடிவேல் (நாதஸ்வர வித்துவான்) நேற்று (23.08.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணராணியின் அன்புக் கணவரும் பிரபாகரன், கருணாகரன், சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷாஞ்சனாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2006) வியாழக்கிழமை ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும்வேளை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகமூர்த்தி லேன்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பிஜயா செல்வராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா செல்வராசா 22.08.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் சண்முகராஜ் (கனடா), விமல்ராஜ், கிரிசாந்தி (சுவீடன்), காலஞ்சென்ற பத்மராஜ், தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இரத்தினசபாபதி, தையல்நாயகி, குணநாயகம், இராஜேஸ்வரி, சந்திராதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவலோகநாதன் (ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மைத்துனரும் அமலேஸ்வரி (கனடா), பஞ்சேஸ்மலர், சதானந்தபோஸ் (சுவீடன்), விக்னேஸ்வரன் (ஆசிரியர், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), கலைவாணி (மாநகரசபை, யாழ்ப்பாணம்), தர்சினி (சுவீடன்), றாஜினி ஆகியோரின் அன்பு மாமனும் ஜெனித்தா, நிமேகா, றஜீபன், லஜீதன், டர்ஷாலினி, டர்ஷிகா, அருள்செல்வி, சொரூபி, அபிராம், சாயிரூபினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.08.2006) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சாந்தி இல்லம்'
கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### பாலசிங்கம் சண்முகநாதன்



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சண்முகநாதன் 21.08.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் தம்பியய்யா - ஜெயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் தனகாந்தலெட்சுமியின் (வாசுகி) அன்புக் கணவரும் நியந்தி, பிரகாஷ், சிவதர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (23.08.2006) புதன்கிழமை பொக்கணை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.*

தகவல்:
தனகாந்தலெட்சுமி (வாசுகி - மனைவி)
நியந்தி, பிரகாஷ், சிவதர்ஷன் (பிள்ளைகள்)

### வேலுப்பிள்ளை கனகராசா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகராசா 22.08.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கலட்சுமி (பட்டு)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருபானந்தராசா, மதிவதனா, தர்மராசா, விவேகானந்தராசா (ஜேர்மனி), சிவபாலன் (ப.நோ.கூ.சங்கம்), நவநீதன் (ப.நோ.கூ.சங்கம்), மல்லிகா, கதீஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன் (தபாலதிபர்), அருந்தவராணி, சரோஜினிதேவி, சத்தியதேவி, சோபனா, ரட்ணசிறி ஆகியோரின் மாமனும் தர்மிகா, பவுத்திரா, அனுஷன், மோனிஷா, நிதர்ஷன், சர்மி, சங்கீர்த்தன், நிவானி, நிலக்ஷன், பர்மினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.08.2006) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,
(இளந்தாரி வைரவர் கோயிலடி),
இணுவில்*

தகவல்:
பிள்ளைகள்.

## நல்லூரான் திருவடியில் சாந்திபெற வேண்டுகின்றோம்
## நெஞ்சைவிட்டகலாத நினைவில் ஏழாவது ஆண்டு

### செல்வன் குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டி கண்ணன்)

*மனம் மகிழ வந்தது*
*07.01.1977*

*மனம் துவழ அகன்றது*
*10.09.1999*



*அன்பாய்ப் பண்பாய் ஆதரவு மொழி பேசிய ஆசைக் கண்ணா!
இன்பமாய் எங்களுடன் வாழ்வாய் என்று காத்திருந்தோமே
எங்களை ஏங்கவிட்டுப் பிரிந்து சென்று விட்டாயே கண்ணா!
நாங்கள் செய்த பாவம்; உன்னுடன் வாழ முடியவில்லையடா!*

*குடும்பத்தின் ஒளி விளக்காய்ப் பிரகாசித்த எங்கள் ஞானேந்திரனே
நீயின்றி எமதில்லம் ஒளியிழந்து போயிற்றே என்செய்வோம்?
உன்னுடைய சிரித்த முகம் எங்கள் நெஞ்சில் நிறைந்து நின்று
என்றும் எம்முடன் அளவளாவுவதை யாரறிவார்? நாம் அறிவோம்!*

*தேரோடும் வீதியிலே நீயுருண்ட காட்சி எங்கள் கண்களிலே
நீரோடும் படி வைத்துவிட்டதே! நெஞ்சம் புண்ணாகி விட்டதே!!
வேரோடு வினையறுக்கும் வேலவனின் திருவருட் கடாட்சத்தால்
பாரொடு விண்ணாய்ப் பரந்து பரகதி நீயும் சேர்ந்தாயோ கண்ணா?*

*நல்லூரின் வீதியிலே இன்று நாம் நடந்து போகும் போதெல்லாம்
எல்லோர் மனங்களிலும் உந்தன் எழிலுருவந் தெரியுதே கண்ணா!
பல்லாண்டுகள் கடந்து உருண்டோடிச் சென்று விட்டாலும்
நல்லூரான் திருவடியில் உன் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்!
ஓம் சாந்தி!*

**என்றும் உன் நினைவில் வாழும்:**
*அன்பு அப்பா, அம்மா, சகோதரிமார், மச்சான், மருமகன்,
மருமகள், அம்மம்மா, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.
கோபிகா ஆடையகம், கௌரி ரெக்ஸ்ரைல்ஸ் (ஊழியர்கள்)*

**40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் – 222 9944, 222 9933, 222 3837

# விட்ட இடத்திலிருந்து தொடர அரசுத் தரப்புத் தயாரா?

வடக்கிலும், கிழக்கிலும் கனரக ஆயுதங்கள் கனலத் தொடங்கி விட்ட இந்தச் சமயத்தில் அமைதி முயற்சிகள் குறித்து - சமாதானப் பேச்சுகள் பற்றி - பேச்சு அடிபடாமல் இல்லை.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் மீண்டும் முழு அளவிலான யுத்தம் வெடித்திருக்கும் இச்சூழலில் கடந்த திங்களன்று இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் சந்தித்தார். அப்போதுதான் அமைதி முயற்சிகளை மீள அதன் தடத்துக்குக் கொண்டு வருவது குறித்து அவர் பேசினார்.

*"தற்போது நடைபெற்று வரும் சண்டையை நிறுத்துவதற்கு அரசு தயார். புலிகள் அதற்குத் தயாரா? புலிகள் சண்டை நிறுத்தத்துக்கு உறுதியான - தெளிவான - அர்ப்பணிப்புடன் கூடிய - ஒரு மோதல் தவிர்ப்பு யோசனைக்கு இணங்குவார்கள் என்றால் நாமும் அதற்குத் தயார். மோதலை நிறுத்தி அமைதி முயற்சிகளை உடனடியாக ஆரம்பிக்க நாம் காத்திருக்கின்றோம்.*

*"புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகப் பேசி இது விடயத்தில் ஒரு முடிவுக்கு இணைத் தலைமை நாடுகளோ, நோர்வே அனுசரணைத் தரப்போ வரவேண்டும்.*

*"புலிகளின் தலைவர் பிரபாகரனை விட வேறு ஒரு புலிகளின் கீழ் மட்டத் தலைவருடன் பேசுவதில் அர்த்தமில்லை. ஆகவே; இவ் விவகாரத்தில் பிரபாகரனுடனேயே நேரடியாகப் பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள்."* - என்று இணைத் தலைமைகளிடம் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அரசுப் படைகள் புலிகள் மீது வலிந்த தாக்குதல்கள் எதையும் எங்கும் தொடுக்கவில்லை என்றும், புலிகளின் தாக்குதல்களுக்குப் பதிலடியாகத் தற்காப்புத் தாக்குதல்களையே அவை நடத்துகின்றன என்றும் அங்கு பிரஸ்தாபித்துள்ளார் அரசின் அதிபர்.

புலிகளும் அப்படித்தான் கூறுகின்றார்கள். தாங்கள் வலிந்த தாக்குதல்களைச் செய்யவில்லை என்றும் அரச படைகளின் தாக்குதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளிலிருந்து தங்களைக் காப்பதற்கான தற்காப்பு நடவடிக்கைகளையே தாங்கள் மேற்கொள்கின்றார்கள் என்றும் அவர்களும் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் ஒன்று களத்தில் வெடித்துள்ள நிலையில் 'நடப்பது யுத்தம் அல்ல' என்றும் 'நாம் மேற்கொள்வது வலிந்த தாக்குதல் அல்ல; தற்காப்பு நடவடிக்கையே' என்றும் விளக்கங்கள் கூறிக் கொண்டிருப்பது பகையுறவையும், இரு தரப்பு விரோதத்தையும் தணிக்க எள்ளளவிலேனும் உதவப்போவதில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட மாவிலாறுப் பிரதேசத்தைக் கைப்பற்ற முழு அளவிலான படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டபடி தாங்கள் நடத்துவது வலிந்த தாக்குதல் அல்ல என்று அரசுத் தரப்பில் கூறப்படும் வியாக்கியானமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. எனவே, அதை விட்டுவிட்டு சமாதானத்துக்கான புதிய சமிக்ஞை பற்றி நோக்குவது நல்லது.

இதய சுத்தியுடனோ அல்லது இதய சுத்தியின்றியோ - நேர்மையுடனோ அல்லது நேர்மையீன எண்ணத்துடனோ - அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கான அழைப்பு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணைத்தலைமை ஊடாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இத்தகைய அழைப்புக்கு தமிழர் தரப்பு - விடுதலைப் புலிகள் தரப்பு - எத்தகைய பிரதிபலிப்பைக் காட்டும் என்ற கேள்வி இப்போது எழுகின்றது. அதை அறிவதற்குப் புலிகளின் தலைமையைத்தான் அணுக வேண்டும் என்பதல்ல. நடப்பு நிகழ்வுகளைப் பக்கச் சார்பின்றி அவதானித்து வரும் சுயாதீன நோக்கர்கள் எவரும் புலிகளின் பிரதிபலிப்பை ஊகித்துக் கூறிவிட முடியும்.

அது, அமைதி முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடங்கலாம் என்பதுதான். அதுவே பெரும்பாலும் புலிகளின் பதிலாக இருக்கும்.

இப்போதைய அமைதி முயற்சிகளைப் பொறுத்தவரை விட்ட இடம் எது?

முதற்சுற்று ஜெனிவாப் பேச்சுத்தான் விட்ட இடம்.

ஜெனிவாப் பேச்சில் இணக்கம் கண்டு தான் ஒப்புக்கொண்ட விடயங்களை முழு அளவில் நடைமுறைப்படுத்தத் தயார் என்பதை இலங்கை அரசு பகிரங்கமாக அறிவித்து, அதைச் செயலிலும் செய்து காட்டுமானால் தடைப்பட்டு, குழம்பிப் போயிருக்கும் அமைதி முயற்சிகள் மீள அதன் உரிய தடத்துக்குத் தானாகவே ஏறிவிடும்.

அதை விடுத்து, ஒரு புறம் வெளிவேஷத்துக்கு அமைதி முயற்சிகள் குறித்து பிரலாபித்துக் கொண்டு, மறுபுறம் ஒட்டுப்படைகள், துணைக் குழுக்கள் போன்றவற்றை ஒழுங்கமைத்து அவற்றின் கொடூரக் கைவரிசையைக் காட்ட அரசு வழிசெய்து கொண்டிருக்குமானால் சமாதான எத்தனங்கள் சாத்தியப்படவேமாட்டா.

அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். மாவட்டம் மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஒட்டுப்படைகளின் அராஜகங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் இரத்த வெறிப் பயங்கரவாதம், தமிழ் மக்கள் மீது மேற்குறிப்பிட்ட பகுதிகளில் பெரும் எடுப்பில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. எழுத்தில் வடிக்க முடியாத பெருங் கொடூரத்தைத் தமிழர்கள் மீது புரிவதற்கு வகை செய்து விட்டு, சமாதானத்துக்கு வழி தேடுவதாக இணைத் தலைமைகளிடம் நடிப்பதில் அர்த்தமேயில்லை.

ஜெனிவாப் பேச்சில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டபடி ஒட்டுப் படைகளை அகற்றி, அமைதி நிலையை - இயல்புச் சூழலை - உருவாக்க அரசுத் தரப்பு இதயசுத்தியுடனும், முழு நேர்மையுடனும் இணங்குமானால், இந்த இறுதிச் சந்தர்ப்பத்தில் கூட சமாதானக் கீற்றுக்கு ஒரு கடைசி வாய்ப்பு இருக்கும் என்று நம்பலாம். அதற்கு அரசுத் தரப்பு தயாரா? வரலாறுதான் பதில் கூறும்.

## குடாநாட்டிலிருந்து கொழும்புவர பதிவு செய்யும் அலுவலகம் திறப்பு

கொழும்பு, ஓக. 24

யாழ். குடாநாட்டில் சிக்கியுள்ள மாணவர்கள், அரச ஊழியர், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களை கொழும்புக்கு அழைத்து வரும் வகையில் சமூக சேவைகள் சமூக நலன்புரி அமைச்சில் பதிவு செய்யும் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய் கல்வியியல் கல்லூரி, பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் பெற்றோர் கொழும்பிலுள்ள சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.

(தொலைபேசி இலக்கங்கள் 2503467, 2584374, 2584373) (ஐ)

## யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்தத்திற்குப் பெரும் தட்டுப்பாடு

### தானம் செய்யுமாறு மக்களுக்கு அழைப்பு

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்தத்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரத்தவங்கியில் எல்லா வகையான இரத்தத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என அதன் பொறுப்பாளர் தெரிவித்தார்.

தட்டுப்பாடு நிலவுவதனால் சாதாரண நோயாளர்களுக்கும், குருதிப்பெருக்கு ஏற்பட்டு வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கும் இரத்தத்தை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியாக ஊரடங்கு நடைமுறையில் இருப்பதனால், நடமாடும் இரத்ததான முகாம்களை ஒழுங்குபடுத்த முடியாமல் இருப்பதும், இரத்த வங்கிக்கு நேரில் வந்து இரத்ததானம் செய்வோர் எண்ணிக்கை குறைவடைந்திருப்பதுமே இரத்தப் பற்றாக்குறைக்குக் காரணங்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த இக்கட்டு நிலையைப் போக்க ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் தமக்குப் பொருத்தமான நேரங்களில் வந்து இரத்ததானம் செய்யும்படி யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பொறுப்பதிகாரி கோரியுள்ளார். ''உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நேர இடைவெளிகளில் அலுவலகங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் ஆலயங்கள் என்பன பொது இடங்களில் இரத்ததான முகாம்களை ஒழுங்குசெய்யும் பட்சத்தில் அவ்விடத்திற்கு வந்து இரத்தச் சேகரிப்புப் பணியை மேற்கொள்ள முடியும்'' - என்றும் அவர் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (ம)

### யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசிய

## பொருள்களுடன் புறப்பட்ட கப்பல் இன்று பருத்தித்துறை வந்துசேரும்

யாழ்ப்பாணம்,ஓக.24

கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டுள்ள 'றுகுணு' கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி நாளை காலை உடனடியாக ஆரம்பமாகும் என்று அரச அதிபர் கே.கணேஷ் நேற்றிரவு தெரிவித்தார்.

இக்கப்பலில் எடுத்துவரப்படும் அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருள்கள் ப.நோ.கூ.சங்க லொறிகளில் ஏற்றப்பட்டு நேரடியாக அந்தந்தச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அதற்கேற்ற வகையில் பொருள்கள் ஒவ்வொரு சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

கப்பலில் எடுத்துவரப்படும் மரக்கறி எண்ணெய் மற்றும் நானாவிதப் பொருள்கள் கோண்டாவில் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான ஒருதொகுதி மருந்துப்பொருள்கள், சிலிண்டர்களும் இக் கப்பலில் எடுத்துவரப்படுகின்றன என அரச அதிபர் மேலும் குறிப்பிட்டார். (ம-1)

## சக்கோட்டையில் தாய் ஒருவர் சுட்டுக்கொலை!

வடமராட்சி சக்கோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட வேளையில் 4 பிள்ளைகளின் தாய் ஒருவர் சுட்டுகொலை செய்யப்பட்டுள்ளார்.

40 வயதுடைய மனோகரன் ராஜினி என்ற இவர் பலாலியில் இருந்து வடமராட்சிக்கு இடம்பெயர்ந்தவர்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட வேளையில் பொருள்களை வாங்குவதற்கு வெளியில் சென்ற வேளையிலேயே ஆயுததாரிகள் இவரை சுட்டுக்கொலை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## நல்லூர் தீர்த்தத் திருவிழாவில் பறவைக்காவடிகள்

நல்லூர் முருகன் ஆலயத் தீர்த்தோற்சவத்திலும் நேற்று அதிக எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

தேர்த்திருவிழாவைப் போன்றே ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேற்றைய திருவிழாவிலும் திரள் திரளாகக் கலந்து கொண்டனர். ஊரடங்கு காலைவேளையில் தளர்த்தப்பட்டதால் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும், குறிப்பாக வலிகாமத்தின் கிராமப்புறங்களில் இருந்து அடியார்கள் பெரும் எண்ணிக்கையில் வந்திருந்தனர்.

முருகனுக்குத் தமது நேர்த்திக்கடன்களைச் செலுத்தும் பொருட்டு பக்தர்கள் பலரும் பறவைக் காவடிகள் எடுத்து வந்தனர். ஆலய வீதியில் நூற்றுக்கணக்கானோர் பாற்காவடிகள் எடுத்துத் தமது நேர்த்திகளைப் பூர்த்திசெய்தனர். முருகப் பெருமான் தீர்த்தமாடிய பின்னர் உள் வீதியில் மட்டுமே திருஉலா வந்தார்.

வருடந்தோறும் நடைபெறும் நயினை - நல்லூர் பாதயாத்திரை நேற்று நண்பகல் முருகன் ஆலயத்தை வந்தடைந்தது. நேற்றுமுன்தினம் நயினை அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட பாதயாத்திரையில் அடியார்கள் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

# வைகோ மீது நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் வற்புறுத்தி வெளிநடப்பு

### தமிழ்நாடு சட்டசபையில் சர்ச்சை

சென்னை,ஓக.24

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற கூட்டமொன்றில் ம.தி.மு.க. தலைவர் வைகோ இந்தியாவின் இறைமைக்கு சவால் விடும் வகையில் உரை நிகழ்த்தினார் எனக் கூறி தமிழ்நாடு சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏக்கள் பிரச்சினை கிளப்பினார்கள். அச்சமயத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அளித்த பதிலில் திருப்தியடையாத அவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பேசிய வைகோ, இந்தியா துண்டாடப்படவேண்டிய நிலையேற்படலாம் என்ற வகையில் உரை நிகழ்த்தினார் என்றும், இது இந்தியாவின் இறைமைக்குமாறான கருத்து என்றும் கூறிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வைகோவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

முதலமைச்சர் பதிலளித்தபோது, வைகோ இந்தியா துண்டாடப்படக் கூடும் என்றுதான் கூறியுள்ளாரே தவிர துண்டாடப்படும் என்று கூறியதாகத் தெரியவில்லை. மேலும் இந்த விடயத்தைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவதே நல்லது என்றும் கூறினார். இதில் திருப்தியடையாத காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். ஆளும் கட்சி கூட்டமைப்பில் காங்கிரஸ் கட்சியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநடப்புச் செய்த காங்கிரஸ் உறுப்பினர்களைச் சபைக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டது.

பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள், தாங்கள் வெளிநடப்புச் செய்யவில்லையென்றும், கலந்தாலோசனையொன்றுக்காகவே கட்சி காரியாலயத்துக்கு வந்ததாகவும் கூறினார்கள். பின்னர் முதல்வர் கருணாநிதி சபையில் மேலும் விளக்கமளிக்கையில், இந்திய நாட்டின் இறைமைக்குமாறாக பேசுபவர்கள், செயற்படுபவர்கள் எவரானாலும் அவர்களுக்கு எதிராகச் சட்டம் அதன் வேலையைச் செய்யும். இதில் எவருக்கும் சந்தேகம் இருக்கத் தேவையில்லையென்றார்.

முதல்வரின் விளக்கம் தமக்குத் திருப்தியளிப்பதாக காங்கிரஸ் கட்சியினர் தெரிவித்தனர். (ப)

## குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றல் யாழ். ஆஸ்பத்திரியில் இன்றுமுதல்

யாழ்ப்பாணம்,ஓக.24

குழந்தைகளுக்கான அனைத்துத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளும் இன்றுமுதல் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளன.

பிராந்திய வைத்திய அதிகாரிகள் பணிமனைகள் தற்போது செயற்படாததால் இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

சங்கானை, கோப்பாய் ஆஸ்பத்திரிகளிலும் இச்செயற்பாடுகளை இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-1)

## ஊர்காவற்றுறைக்கு பதில் நீதிபதி நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.24

ஊர்காவற்றுறை மாவட்ட பதில் நீதிபதியாக இ.த.விக்னராஜா நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளரால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் சொக்ஸி விடுமுறையில் தெற்கே சென்று திரும்ப முடியாத நிலையில் இருப்பதால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-1)

## தபால் விநியோகமும் நேற்றுமுதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்!

யாழ்ப்பாணம்,ஓக.24

குடாநாட்டுக்குள் தபால் விநியோகமும் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். பிரதான தபாலகத்தில் தேங்கிக் கிடந்த சகல தபால்களும் நேற்று வாகனம் மூலம் தபாலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன என்று பிரதி அஞ்சல் மா அதிபர் தெரிவித்தார்.

இனிவரும் நாள்களில் ஊரடங்கு நீக்கப்படும் நேரத்தில் தொடர்ந்து தபால் விநியோகம் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஊரடங்கு நீக்கியபின் பிரதான தபாலகத்தின் பெட்டிகளில் சேர்க்கப்படும் தபால்கள் உடன் விநியோகிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அதேவேளை - சகல தபாலகங்களையும் ஊரடங்கு நீக்கப்பட்டவேளைகளில் திறந்து மக்களுக்குச் சேவையாற்றும்படியும் -

சகல ஊழியர்களையும் தபாலகங்களுக்குச் சமுகமளிக்கும்படியும் - அவர் கேட்டுள்ளார். (ம-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு உரிமைகளை பெற்றுத்தரும் தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது

## தமிழக உறவுகளின் ஆதரவுக் குரல் ஆறுதல் தருகிறது என்கிறார் மகேஸ்வரன்

கொழும்பு, ஓக. 24

இலங்கை தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கின்றது. தமிழ் மக்கள் குண்டுவீசி அழிக்கப்படுவதற்கு தமிழகத்தில் பாரிய எதிர்ப்பு கிளம்பியுள்ளதெனக் கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. தி.மகேஸ்வரன் நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

சபைஒத்திவைப்புவேளை விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

யாழ். குடாநாட்டைச்சேர்ந்த ஐந்து லட்சம் மக்கள் இன்று திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் அடைபட்டுக்கிடக்கின்றனர். வரைமுறையற்ற வகையில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குண்டுவீச்சால் அவர்கள் பாதுகாப்புக்காக இடம் பெயரக்கூட முடியாமல் தவிக்கின்றனர். கடந்த 14 நாட்களாக எமது மக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். பாகிஸ்தானும், இஸ்ரேலும், யுத்த உபகரணங்களை வழங்கி விட்டன என்பதற்காக அறம்புறமாகக் குண்டுகளையும், மோட்டார்களையும் வீசி தமிழ்த் தரப்பின் ஆயுத பலத்தை நசுக்க இடமளிக்க முடியாது.

தமிழர்களுக்கு சகலதையும் வழங்கத் தயாராகவிருப்பது போல் நடித்துக்கொண்டு அரசு இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

முல்லைத்தீவில் 61 பிஞ்சுகளை விமானக் குண்டு வீசி கொன்றுவிட்டுப் புலிகளின் முகாம் மீது விமானக் குண்டு வீச்சை நடத்தியதாக அரசு மார் தட்டிக் கொள்கின்றது.

தமிழகத்தில் எமது உடன்பிறப்புகள் எமக்காக குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். இது எமக்கு இந்த நிலையிலும் ஆறுதலைத் தருகிறது.

யாழ்.குடாநாட்டில் கடந்த 14 தினங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். முறையாக மரண விசாரணை கூட நடைபெறவில்லை. வைத்தியசாலை சவச்சாலையில் பல சடலங்கள் கிடக்கின்றன.

அரசுக்கு முறையான கொள்கைத் திட்டமில்லை. ஜே.வி.பியின் கோரிக்கைகள் ஹெல உறுமயவின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எமது கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன.

வன்னிப் பகுதியில் ஒரு லட்சம் அகதிகள் இருக்கின்றனர். இவர்களுக்கு கடந்த 14 நாட்களாக எதுவித உணவுப் பொருட்களுக்கும், எரிபொருளும் அனுப்பிவைக்கப்படவில்லை. கிளிநொச்சி வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக அங்குள்ள வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். குண்டுவீச்சு காரணமாக காயமுற்ற மக்கள் மாணவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலை அங்குள்ளது. எனவே, அரசு உடனடியாக மருந்துவகைகளை அனுப்பி வைக்கவேண்டும்.

காலம் தாழ்த்தாமல் இந்த அரசு தமிழர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்கவேண்டும். இன்று படையினர் தமிழ் புத்தி ஜீவிகளை கொன்று குவிக்கின்றனர். இதைத் தமிழினம் ஒருபோதும் அனுமதிக்காது. குடாநாட்டில் சுமுகநிலை ஏற்படுத்தப் படவேண்டும். ஊரடங்கு நீக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும். மின்வெட்டு நீக்கப்படவேண்டும்.

மூதூரில் 17 தொண்டர் நிறுவன ஊழியர்களை புலிகள் சுட்டுக்கொலை செய்ததாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். இப்பணியாளர்களை கடற்படையினரே சுட்டுக்கொலை செய்தனர். இதை மூடிமறைக்க அரசு பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்கின்றது. எம்மைவிட்டு பிரிந்து சென்று அமைச்சராகவுள்ள மஹிந்த சமரசிங்க விசாரணைகளுக்கு அவுஸ்திரேலிய உதவியை நாடியுள்ளதாகத் தெரிவித்தார். விசாரணையை மூடிமறைக்கவே அரசு அவுஸ்திரேலியாவை நாடியுள்ளது. என்றார். (ஐ-2)

## கண்டன செப வழிபாடு



யாழ்ப்பாணம், ஓக.24

கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டிக்குச் சென்ற பின்னர் காணாமற்போன பங்குத் தந்தை அருட்திரு ஜிம்ரோன் அவர்களுக்கு நேர்ந்த கதிக்குக் கண்டனம் தெரிவிக்கும் செபவழிபாடு இன்று சுண்டுக்குழி யுவானியார் தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டு ஒரு மணி நேரத்தில் குருமார்கள், துறவிகள், பொதுமக்கள் அனைவரையும் தேவாலயத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

## அமைச்சுப் பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியும், பிரதிக் கல்வியமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சு ஆகிய பதவிகளே இ.தொ.காவிற்கு வழங்கப்படவுள்ளன.

இதில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பொறுப்பை இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஏற்கவுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் பிரதிக் கல்வி அமைச்சராகவும் தற்போது நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராக செயற்பட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சச்சிதானந்தன் அப்பதவியை ராஜினாமா செய்துவிட்டு தோட்ட உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் பதவியை ஏற்கவுள்ளதாகவும் தெரிகிறது.

எனினும், அரசாங்கத்துடன் இணைவதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரியிருந்த முக்கியமான அமைச்சுப் பொறுப்புகளை வழங்க முடியாதென அரசு நிராகரித்து விட்டதாகத் தெரிகிறது.

அரசுடன் இணைவதாயின் சிவில் விமான சேவைகள் அமைச்சையோ, நகர அபிவிருத்தி அமைச்சையோ வழங்குமாறு இ.தொ.கா. கோரியிருந்ததாகவும், ஆனால், அந்த அமைச்சுகளை வைத்திருக்கும் அமைச்சர்கள் பொறுப்பை விட்டுக்கொடுக்கத் தயார் இல்லையென்பதால் இ.தொ.காவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதாகவும் அரசின் உயர் மட்ட வட்டாரங்கள் கூறின.

அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வருவோரை அரவணைக்க அரச உயர்மட்டம் தயார் என்றபோதிலும் அவர்களின் நிபந்தனைகளை ஏற்க அரசு தயாராக இல்லையென்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இ.தொ.கா. அரசுடன் இணைவது தொடர்பான இறுதிக்கட்ட பேச்சுகள் சில தினங்களுக்கு முன்னர் நிறைவடைந்துவிட்டன. இதனையடுத்து நேற்றுமுன்தினம் இ.தொ.கா. தலைமையகமான சௌமியபவனில் கூடிய அக்கட்சியின் முக்கியஸ்தர்கள், அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றபின்னர் நியமிக்கப்பட வேண்டிய செயலாளர்கள் மற்றும் இணைப்புச் செயலாளர்மார் ஆகியோரின் பெயர்ப்பட்டியலை தயாரித்தனரெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## அகதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

சமாதானச் செயற்பாடுகளில் பிரபாகரனால் முன்வைக்கப்படும் நேரடி உத்தரவாதத்தையே அரசு முதன்மையாகக் கருதும். புலிகளின் ஏனைய தலைவர்களது உத்தரவாதத்தை அரசு பெரிதுபடுத்தாது.

இஸ்ரேல் படையினர் இருவர் கடத்தப்பட்டதனாலேயே லெபனானில் யுத்தம் வெடித்தது. ஆனால், இலங்கையில் நூற்றுக்கணக்கான பாதுகாப்புப் படையினர் கொல்லப்படுகின்றனர். இந்த நிலையிலும் அரசு பொறுமையுடன் செயற்படுகின்றது.

சிறுவர் சிறுமியருக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதை மறைக்கவே புலிகள் பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றனர். சிறார்களை படையில் சேர்த்து சித்திரவதை செய்யும் புலிகள் இன்று சிறார்களுக்காக கண்ணீர் வடிக்கின்றனர்.

இந்திய இலங்கை நட்புறவை சீர்குலைக்க புலிகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். புலிகளின் திட்டமிட்ட செயற்பாட்டினாலேயே தமிழ் மக்கள் இந்தியாவுக்கு உயிரைப் பணயம் வைத்துச் செல்கின்றனர்.

திருகோணமலைத் துறைமுகத்தைத் தாக்குவதற்கு ஏதுவாகவே மூதூரில் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 17 பணியாளர்களை புலிகள் ஈவிரக்கமின்றி சுட்டுக்கொலை செய்துள்ளனர். இது குறித்து பக்கசார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. - என்றார். (ஐ)

## நோர்வேயை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுடன் சேர்ந்து பணியாற்ற ஜே.வி.பி. முன்வைத்த யோசனைகளுக்குப் பதிலாக அரசினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சந்திப்பொன்று நடைபெற்றது. இந்த விடயம் குறித்துத் தொடர்ந்தும் பேசுவது என்று அதில் முடிவுசெய்யப்பட்டது. அரசின் யோசனைகள் குறித்து ஆராயத் தமக்குக் கால அவகாசம் தேவைப்படுகின்றது என்று ஜே.வி.பி. கேட்டுள்ளது. (ம)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்புகள், உதவிகள் குறித்து இந்த பேச்சுகளின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கையை விடுப்பார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் கூறின.

ஜனாதிபதியுடனான அமெரிக்க விஜயத்தில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## சிவமகாராசாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அரசியல் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நல்ல மனிதர். அசாத்தியமான குணவியல்புகள் கொண்டவர். எளிமையும், இனிமையும் இணைந்த ஒரு இனிய மனிதர். அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொள்வார். அனைவரையும் கவர்ந்து கொண்ட ஒரு புரட்சிகரமான அரசியல்வாதியும், சமூகசேவையாளருமாவார்.

இவர் ஒரு சிறந்த தேசபக்தர். எமது மக்களையும், மண்ணையும் ஆழமாக நேசித்தவர். தமிழரின் வாழ்வு சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு சிதைந்து போவதை அவர் அறவே வெறுத்தார். இந்த இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்கள் முற்றாக விடுபட்டு, விடுதலை பெற்று, சுதந்திரமாக, நிம்மதியாக, கௌரவமாக வாழ்வதையே தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரித்துக்கொண்டார். இந்த இலட்சியப்பற்று அவரை எமது விடுதலை இயக்கத்தோடும் இறுக்கப் பிணைத்தது. தமிழீழ விடுதலைப புலிகள் இயக்கத்தையும், அதன் போராட்ட இலட்சியத்தையும் முழுமையாக நேசித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தார்.

அரசியல், ஆன்மீகம், கூட்டுறவு, ஊடகம் எனப் பல்வேறு பெரும் தளங்களில் இவர் செயற்பட்டார். இவரது செயற்றளம் அகன்று விரிந்திருந்தது. யாழ். மண்ணோடும் அந்த மண்ணில் மக்களோடும் ஒன்றியதாக அவரது வாழ்வு சுற்றித்திரிந்தது. எதிரியின் அகோர ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள யாழ். மண்ணில் நின்றவாறு, எதிரியின் அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அசைந்து கொடுக்காமல் யாழ். மக்களுக்கு என்றுமே காப்பரணாக நின்றார்.

போர் நெருக்கடிமிக்க நாள்களில் அந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்தார். அக்கிரமிப்புப் படைகளின் அழிவுகளையும் அட்டூழியங்களையும், நெஞ்சுறுதியுடனும், நேர்மையுடனும் உலகிற்கு வெளிக்கொணர்ந்தார். மக்களிடத்தில் விடுதலை உணர்வையும், தேசப்பற்றையும் தட்டியெழுப்பினார். எல்லாவற்றுக்கும் மேலாக யாழ். மண்ணில் 'நமது ஈழநாடு' என்ற பத்திரிகையை ஆரம்பித்து, அப் பத்திரிகையின் நிர்வாக இயக்குநராக இருந்து அந்தப் பத்திரிகையின் இன்றைய வளர்ச்சிக்குப் பங்களித்தார். இவர் ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றிய மக்கள்பணி அளப்பரியது.

சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப் பணியை கௌரவிக்கும் முகமாக ''மாமனிதர்'' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்துவிடுவதில்லை. அவர்கள் எமது தேச ஆன்மாவில் என்றும் நீங்காத நினைவுகளாக காலமெல்லாம் நிலைத்திருப்பார்கள்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''
வே.பிரபாகரன். தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

## அரசுப் படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

''மாவிலாறில் ஏற்பட்ட உள்ளூர்ப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்கக் கூடியதாக இருந்த போதிலும், ஸ்ரீலங்கா அரசு வேண்டுமென்றே வலிந்த தாக்குதல் நடவடிக்கையை முன்னெடுத்தது என்பதற்கு நோர்வேயின் அனுசரணையாளர்களும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சாட்சி களாகவுள்ளார்கள்.

''எம்முடைய கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் கிழக்குப் பகுதிக்குள் பெருமளவு ஆயுத பலத்துடன் பாரியளவிலான தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற தன்னுடைய நீண்ட கால இரகசியத் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தியது.

''நீர்ப்பிரச்சினை உருவாகுவதற்கு முன்னதாகவே குறிப்பிடத்தக்க காலப் பகுதியில் இந்தப் பிராந்தியத்தில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்கள் இதற்கு ஆதாரமாகும்.

''இதற்கு மேலாக, நீர் விநியோகத்தைத் திறந்து விடுவதுதான் தன்னுடைய தாக்குதல் நடவடிக்கையின் நோக்கம் என ஸ்ரீலங்கா அரசு கூறியிருந்தபோதிலும், நீர் விநியோகம் திறந்துவிடப்பட்ட பின்னரும் தன்னுடைய இராணுவ நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா இராணுவம் தொடர்ந்து நடத்திவருகின்றது.

''தன்னுடைய வலிந்த தாக்குதலின் பின்னணியில் ஸ்ரீலங்கா அரசு பரந்த நோக்கங்களைக் கொண்டுள்ளது என்பது இந்த நடவடிக்கையின் மூலமாக உறுதியாகின்றது.

''திருமலைக் கடற்படைத் தளத்திலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் தன்னுடைய தாக்குதல் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியபோது, அவர்களது ஆட்லறித் தாக்குதல்களையும், முன்னோக்கிய படை நகர்வையும் தடுப்பதற் காக அவர்களது தாக்குதல் நிலைகளின் மீது தாக்குதல் நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நாம் உள்ளானோம்.

''ஸ்ரீலங்கா இராணுவமே தன்னுடைய தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதுடன், மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் விடுதலைப் புலிகள் மீது தாக்குதலை நடத்தியது.

''யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எழுதுமட்டுவாள், கிளாலி, நாகர்கோவில் மற்றும் முகமாலை பகுதிகளில் ஓகஸ்ட் 11ஆம் திகதி நாள் முழுவதும் பாரிய ஆயுதங்கள் மற்றும் படையினரின் நகர்வுகள் அவதானிக்கப்பட்டன. இராணுவத்தைப் பலப்படுத்தும் இந்த நடவடிக்கைக்கு உதவும் முகமாகப் பொதுமக்களுடைய நடமாட்டங் களும் வரையறுக்கப்பட்டன. அன்றைய தினம், வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு வட பகுதி காவல் நிலைகளைத் தாண்டி எமது பகுதியை நோக்கிப் பாரிய இராணுவ நட வடிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா இராணுவம் ஆரம்பித்தது. இது போர் நிறுத்தத்தைப் பாரிய ளவில் மீறும் ஒரு நடவடிக்கையாகும். இருந்த போதிலும், ஸ்ரீலங்கா இராணுவத்தின் இந்த வலிந்த தாக்குதல் நடவடிக்கை தொடர்பாக அறிந்திருந்த எமது போராளிகள் அதனைத் தோற்கடித்துள்ளார்கள்.''

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ஐ)

## றுகுணு கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளனர்.

இதனையடுத்து, போக்குவரத்து வசதியின்றி உள்ள வெளிநாட்டவர்களை றுகுணு கப்பல் மூலம் முதற்கட்டமாக அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதற்கான பதிவு வேலைகளும் ஜனாதிபதி செயலகத்தின் அனுமதியுடன் யாழ். செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இருப்பினும், றுகுணு கப்பல் பயணிகளை ஏற்றிச்செல்லாது எனக் கூறப்படுகின்றது. பொருள்களை இறக்கியதும் உடனடியாகவே கப்பல் கொழும்பு திரும்பவேண்டியுள்ளதாலும் -

பயணிகளை ஏற்றிச்செல்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாகப் பூர்த்திசெய்ய முடியாதநிலை உள்ளதாலும் - கப்பலில் பயணிகளை ஏற்றிச் செல்வது சந்தேகம் என அரச அதிபர் தெரிவித்தார்.

தெற்கே செல்வதற்கு நேற்றுவரை 6 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் யாழ். செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-1)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org